# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 113 /2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Father's/Husband's Name : | கொத்தாளமுத்து |
| Village | : ராஜேந்திரநகர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** எனது தந்தை கொத்தாளமுத்து மற்றும் எனது தாயார் கோமதிஅம்மாளுக்கும் நான், பிரதிவாதிகளும் நான்கு மக்கள் ஆவோம் என்றால் சரிதான். எங்களின் மூத்தவர் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரி என்றால் சரிதான். எனது தாயார் கோமதி அம்மாள் தந்தை கொத்தாள முத்து மனைவியா அல்லது பினாமியா என்று கேட்டால் மனைவி தான். எனது வழக்குரையில் எனது தாயார் எனது தந்தைக்கு பினாமி என்று சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல, தாயார் பெயரில் அவர் சொத்து வாங்கியிருக்கிறார். கொத்தாளமுத்து எனது தாயார் பெயரில் சொத்து வாங்கி கொடுத்தார் என்பதற்கு எழுத்து பூர்வமான ஆவணம் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. எனது தாயார் 3 கிரைய ஆவணங்களின் மூலம் மொத்தம் 11 சென்ட் நிலம் கிரையம் வாங்கியிருக்கிறார்.

2) மேற்படி இடத்தில் கிழக்கு ஓரத்தில் நானும் எனது தாய் தந்தையினரும் சேர்ந்து தகர செட்டு போட்டு குடியிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தகரம் செட் போட்ட வீட்டில் எனது தகப்பனார் குடியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 10 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி தகர செட்டில் குடியிருந்த எனது தந்தை தாவா வீட்டை கட்டினார் என்று சொன்னால் சரிதான். எனது என் தந்தை தாயார் கோமதி அம்மாள் எப்போது இறந்தார் என்று கேட்டால் தேதி ஞாபகம் இல்லை. ஏப்ரல் மாதம், 1987 ஆம் ஆண்டு இறந்தார். எனது தாயார் கடந்த 26.01.1987 ஆம் ஆண்டு இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாரின் இறப்பு சான்றிதழை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்று கேட்டால் இறப்பு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை.

3) பதிவு செய்யப்பட்டிருந்தால் அதை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனது தாயார் கடந்த 26.01.1987 ம் ஆண்டு இறந்தார் என்பது தெரிந்தும் அதை மறைப்பதற்காக தான் அவரது இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை கொத்தாளமுத்துவின் பெயரில் இருந்த சொத்துக்களை அவரது வாழ்நாளிலேயே நானும் பிரதிவாதிகளும் எங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அவரவர் பாகத்தை தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாய் தந்தையரின் வாழ்நாளில் தாவா சொத்தை பொறுத்து அவர்கள் எந்த ஏற்பாடும் செய்து வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2015 ஆம் ஆண்டு வாய்க்கரலாக பிறவி ஆச்சாரப்படி பிரித்து கொடுத்தார்கள்.

4) நான் சொல்வது போல் வாய்க்கரலாக பிறவி ஆச்சாரப்படி பிரித்து இருந்தால் 1ம் பிரதிவாதியான ராஜேஸ்வரிக்கு தான் மேற்கு பக்கம் உள்ள தாவா வீடு மற்றும் சொத்துக்கள் அவரது பாகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. பெண் பிள்ளைகளுக்கு ரோட்டிற்கு மேற்கு பக்கம் 5 செண்ட் தானமாக கொடுத்து விட்டார்கள்.மேற்படி 5 சென்ட் நிலத்தை எனது தந்தை 1996 ஆம் ஆண்டு கிரையம் பெற்று 1ம் பிரதிவாதியின். திருமணத்தின்போது அவருக்கு சீராக கொடுத்து சொத்து என்று சொன்னால் சரியல்ல அவரது பாகத்திற்காக கொடுக்கப்பட்ட சொத்து. நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதியின் பாகத்திற்காக கொடுத்த சொத்தாக இருந்தால் அதை தானமாக கொடுத்திருக்க மாட்டோம். எங்களுக்கு கொடுத்தது போல் வாய்க்கரலாக தான் பிரித்துக் கொடுத்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

5) 1ம் பிரதிவாதியின் கணவர் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்த 5 சென்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதியின் கணவரின் வருமானத்தை கொண்டு அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை தான் வீடு கட்டிக் கொடுத்தார். எனது தந்தை நிலத்தை தான் தானமாக கொடுத்தார் என்று சொன்னாலும், அதில் வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. சட்டப்படி தாவா சொத்தான 11.5 சென்ட் நிலத்தில் பிறவி ஆச்சாரப்படி பிரித்துக் கொடுத்தால் மேற்கு பக்கம் உள்ள வீடும் 1ம் பிரதிவாதிக்கு தான் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தான 11.5 செண்ட் நிலத்திற்கு தனித்தனியாக நானும் 2, 3 பிரதிவாதிகளும் பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

6) எந்த ஆவணத்தின் அடிப்படையில் எங்கள் மூன்று நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது தந்தை காலத்திலேயே அவர் பெயர் மாற்றம் செய்து கொடுத்துவிட்டார். தாவா சொத்தை பொறுத்து 2023 ஆம் ஆண்டு தான் எங்களது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் கோமதி அம்மாள் கடந்த 26.01.1987 ஆம் ஆண்டு இறந்த பிறகு 06.03.1987 ஆம் ஆண்டு அவர் எழுதி வைத்தது போல் ஒரு உயில் ஆவணத்தை தயார் செய்து அதனடிப்படையில் தாவா சொத்துக்களில் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவை ரத்து செய்யக்கோரி பெரியகுளம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் 1ம் பிரதிவாதியும் மனு செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மனுவின் மீது விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய சார் ஆட்சியர் பெரியகுளம் அவர்கள் ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பியிருந்தார் என்றால் சரிதான்.

7) அதனடிப்படையில் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு அழைப்பானை வந்தது என்று சொன்னால் ஒரு முறை வந்தது. மேற்படி அழைப்பானை வந்த பிறகு அந்த நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல அதற்கு முன்பும் எங்களுக்குள் பிரச்சனை ஆனதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் விபரத்தை ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கு தகவல் கொடுத்து இருக்கிறேன் என்றால் சரிதான். அதனால் மேற்படி சார் ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

8) தாவா சொத்தை சட்டப்படி பிரிக்கும்போது மேற்கு பக்கம் உள்ள வீடும், நிலமும் 1ம் பிரதிவாதிக்கு சென்று விடும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கை நாம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி 1ம் பிரதிவாதிக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை தடுக்கும் எண்ணத்தில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1) வழக்கு சொத்தில் 4 ½ செண்ட் நிலத்தை என் தாயார் கோமதி அம்மாள் பிறந்த 1984ம் வருடம் கந்தசாமி தேவரிடமிருந்து கிரையமாக பெற்றார் என்றால் சரிதான். அதேபோல் 05.01.1985 ஆம் தேதி 5 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை எனது தாயார் தான் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை என் தாயார் பெயரில் வாங்கி கொடுத்தார். அதேபோல் 20.03.1985 ஆம் தேதி 3 செண்ட் நிலத்தை தாயார் கிரையம் வாங்கினார் என்று சொன்னால், எனது தந்தை வாங்கிக் கொடுத்தார். மேற்படி 11.5 செண்ட் நிலத்தையும் எனது தாயார் திருமணத்தின்போது அவர் கொண்டு வந்த சீர்வரிசை நகைகளை வைத்து தான் விற்று கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கந்தசாமி தேவர் எனது தாயாரின் தந்தை என்று சொன்னால் சரியல்ல.

2) தாவா சொத்தை பொறுத்து எனது தந்தை எந்த ஏற்பாடும் செய்யவி்லை என்றால் சரியல்ல, வாய்க்கரலாக 2016ம் ஆண்டு பிரித்துக் கொடுத்தார். நான் சொல்வது போல் 2016ம் ஆண்டு வாய்க்கரலாக தாவா சொத்தை பிரித்துக் கொடுத்திருந்தால், 2017ம் ஆண்டில் எங்களுக்குள் ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தில் தாவா சொத்துக்களையும் காட்டியிருப்போம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தும் எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்துக்களும் எனது தாயார் பெயரிலேயே இருந்ததால் தான் எங்களுக்குள் தாவா சொத்தையும் வேறு சொத்துக்களையும் பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால் சரிதான். பெண் பிள்ளைக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவரது வாரிசுகளான எனக்கும், பிரதிவாதிகளுக்கும் சமமாக பாகம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா வீட்டில் நான் குடியிருக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கூட்டு உரிமையாளருக்கு எதிராக நான் கோரியுள்ள நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தேனி–வருசநாடு மெயின்ரோட்டில் உள்ள மதிப்பு அதிகமான சொத்து என்பதால் 1ம் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்க மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

Taken down by me/before me in open court on 06.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.06 17:24:14 +0530

District Munsif,
Aundipatti.